ந.க.எண். 26400/பொது3 /2018 வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
நாள் : 29.11.2019 இயக்குநரகம், கிண்டி, சென்னை –32.

## குறிப்பாணை

பொருள்: பொது பிரிவு – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை – பயிற்சிப் பிரிவு - அடிப்படை விதி 56 (2)–ன் கீழ் கட்டாய ஓய்வு - 31.12.2019 உடன் முடிவடையும் ஆண்டிற்கான ஆய்வு - விவரம்/பதிவுறுத்தாட்கள் அனுப்பிடக் கேட்டது – குறித்து.

பார்வை: இயக்குநரக குறிப்பாணை மேலிட்ட எண், நாள்.10.08.2018, 25.10.2018,15.02.2019 மற்றும் 03.05.2019.

......

பார்வையில் காணும் குறிப்பாணையின் மூலம், அடிப்படை விதி 56(2)–ன் கீழ் கட்டாய ஓய்வு குறித்த ஆய்வு மேற்கொள்ளும் வகையில் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அலுவலர்களின் பதிவுறுதாட்கள் மற்றும் உரிய விவரங்களை அனுப்பி வைத்திட தெரிவிக்கப்பட்டது.

1. 31.12.2019 உடன் முடிவடையும் ஆண்டிற்கு ஆய்வு செய்யப்பட வேண்டிய அ, ஆ மற்றும் இ பிரிவு அலுவலர்கள் 01.01.1969 முதல் 31.12.1969 வரையுள்ள காலத்தில் பிறந்த தேதி வரும் அலுவலர்களும், 'ஈ' பிரிவு அலுவலர்களுள் 01.01.1964 முதல் 31.12.1964 வரை பிறந்த தேதியுடைய அலுவலர்களும் ஆய்வு செய்யப்பட வேண்டியவர்களாவர்.
2. 01.01.1989 முதல் 31.12.1989 வரையுள்ள காலத்தில் பணி நியமனம் செய்யப்பட்ட 30 ஆண்டுகள் பணி முடித்த அலுவலர்களும் ஆய்வு செய்யப்பட வேண்டியவர்களாவர்.

மேற்குறிப்பிட்ட தேதிகளுள் 50 வயது (அடிப்படை பணியாளர்களுக்கு55 வயது) முடிவடையும் அல்லது 30 ஆண்டு பணி முடிவடைதல் இவற்றில் எது முதலில் நிகழ்கிறதோ அவ்வலுவலர் ஆய்வு செய்யப்பட வேண்டியவராவார்.

M7/D/Sheik/Gen/Gen3/Memo (T)

எனவே, மேற்படி விவரங்களின் அடிப்படையில் உரிய அலுவலர்களின் பதிவுறுதாட்கள் அனுப்பி வைத்திட கோரப்பட்டது. எனினும் இதுநாள் வரை முகவரியில் காணும் அலுவலர்களால் ஆவணங்கள் அனுப்பி வைக்கப்படவில்லை.

எனவே, இனியும் காலம் தாழ்த்தாது உரிய அலுவலர்களின் பதிவுறுதாட்களை அனுப்பி வைத்திட தெரிவிக்கப்படுகிறது. இப்பொருள் குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளதால் இதன் மீது தனி கவனம் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. 10.12.2019-க்குள் விவரம் அனுப்பப்படவில்லையெனில் தங்கள் அலுவலகத்திலிருந்து கட்டாய ஓய்வு குறித்த ஆய்வு மேற்கொள்ள வேண்டிய அலுவலர் / பணியாளர்கள் எவருமில்லை என்று கருதப்படும். பின்னர் அறியவரும் நேர்வில் அதற்கான பொறுப்பினை அலுவலக தலைவர்களே ஏற்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது மிகவும் அவசரம்.

3/12/19

இயக்குநருக்காக.

2/12/19

பெறுநர்

1. மண்டல பயிற்சி இணை இயக்குநர்,
   சென்னை, திருச்சி.
2. துணை இயக்குநர்/முதல்வர்/முதல்வர்,
   அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்,
   அம்பாசமுத்திரம், அம்பத்தூர் (ம), ஆண்டிமடம், அருப்புக்கோட்டை, ஆண்டிப்பட்டி (ம), போடி நாயக்கனூர், செக்கானூரணி, செங்கல்பட்டு, சிதம்பரம், குன்னூர், கடலூர், கிண்டி (ம), ஓசூர், காரைக்குடி, கருமந்துரை, காட்டுமன்னார் கோவில், மதுரை (ம), மணிகண்டம், மேட்டூர் அணை, முதுக்குளத்தூர், நீடாமங்களம், வடசென்னை, ஒரத்தநாடு, பரமக்குடி, பேட்டை, புள்ளம்பாடி (ம), இராமநாதபுரம், தஞ்சாவூர், தென்காசி, திருவையாறு, திருவண்ணாமலை, திருச்செந்தூர், திருவான்மியூர், திருச்சி சிறை, உடுமலைப்பேட்டை, வடகரை, வேப்பலோடை, கோட்டூர், விருதுநகர், கோபிசெட்டிபாளையம்.
3. உதவி இயக்குநர்,
   மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம்,
   காஞ்சிபுரம், ஓசூர், சென்னை, திருச்சி, பேட்டை.

M7/D/Sheik/Gen/Gen3/Memo (T)